# இந்தியத்துணைத்தூதரகம்

## யாழ்ப்பாணம்

***

## ஊடக அறிக்கை

இந்தியாவின் 75-வது சுதந்திர தின கொண்டாட்டம் “ஆசாதிகா அம்ரித் மஹோத்ஸவ்” எனும் சிறப்பு நிகழ்வுகள் வரிசையில் ஒரு பகுதியாக, யாழ் இந்திய துணை தூதரக அதிகாரிகளும், 512 ஆவது படையணியின் இராணுவ வீரர்களும் நட்பு ரீதியான கைப்பந்து தொடரை (பிப்ரவரி 19, 2022) விளையாடினர்.

2. யாழ் இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் மற்றும் கர்னல் ஜெகத் குமாரா ஆகியோர் பந்தை பரிமாறி தொடரை துவக்கி வைத்தனர். 512 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி கேணல் கொடவத்த நிகழ்வில் கலந்துகொண்டார். போட்டியின் நிறைவில் இரு அணிகளுக்கும் கோப்பைகள் வழங்கப்பட்டன. இரு நாடுகளுக்கிடையிலான உறவு 2500 ஆண்டுகளுக்கும் மேலானது மற்றும் இது போன்ற நடவடிக்கைகள் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவை மேலும் உறுதிப்படுத்தும்.

3. நிகழ்வின் புகைப்படங்கள் சில இணைக்கப்பட்டுள்ளன.

****

யாழ்ப்பாணம்

20 பெப்ரவரி, 2022